பக்கங்கள் : நான்கு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 20 புதன்கிழமை (03.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :157.

## சர்வதேச ஊடக சுதந்திரதினத்திற்கு முதல்நாள்

# உதயன் அலுவலகத்திற்குள் புகுந்து

# ஆயுததாரிகள் நேற்று வெறியாட்டம்

## முகாமையாளர் உட்பட இருவர் பலி!
## இருவர் காயம்; உடமைகள் சேதம்!!



மிலேச்சத்தனமான படுகொலைக்கு உள்ளான இளைஞர் ரஞ்சித்தின் உடல்.



மிலேச்சத்தனமான படுகொலைக்கு உள்ளான சந்தைப்படுத்தல் முகாமையாளர்.

யாழ்ப்பாணம், மே 3

யாழ். நகரில் அமைந்துள்ள உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் நேற்று முன்னிரவு நுழைந்த ஆயுததாரிகள் நடத்திய வெறியாட்டத்தில் முகாமையாளர் ஒருவர் உட்பட இருவர் அந்த இடத்திலேயே பலியாகினர். மற்றும் இரு பணியாளர்கள் படுகாயமடைந்தனர். முகங்களை துணிகளால் மூடிக்கட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய கும்பல் ஒன்று இந்த அராஜகத்தைப் புரிந்துவிட்டுத் தப்பிச் சென்றது.

பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திற்குள் நுழைந்து குறிப்பிட்ட உதவி ஆசிரியர் ஒருவரின் பெயரைக் கேட்டு சகட்டு மேனிக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அலுவலகத்தின் கணனிப் பிரிவிற்குள் நுழைந்து அங்கிருந்த சகல கணனிகள் மீதும் ரவைகளைப் பொழிந்து அவற்றைச் சுக்குநூறாக்கிச் செயலிழக்கச் செய்தனர்.

மிகத் தெளிவாக - சுத்தமாக - தமிழ் பேசிய ஆயுததாரிகளே இந்த ஈனச் செயலைப் புரிந்துவிட்டுச் சென்றனர். கெல்மெட் அணிந்திருந்த அவர்கள் தமது முகங்களை துணிகளால் மூடிக்கட்டி மறைத்திருந்தனர்.

முன்னிரவு 7.25 மணியளவில் பத்திரிகை அலுவலகத்தில் வழமை போன்று பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அலுவலகத்தின் முன்பக்கச் சுவரின் மீதாகத் திடீரென ஏறிப் பாய்ந்த ஆயுததாரிகள் ஐந்து பேர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இந்த வெறியாட்டத்தில் ஈடுபட்டனர்.

உதயனின் சந்தைப்படுத்தல் முகாமையாளரான பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்-வயது 36), விநியோகப் பகுதி மேற்பார்வையாளரான எஸ்.ரஞ்சித் ஆகியோர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர். விநியோகப் பகுதி ஊழியர்களான எஸ்.உதயகுமார் (வயது 48), நா.தயாகரன் (வயது 24) ஆகியோர் காயமடைந்தனர். சம்பவத்தை அடுத்து பயத்தில் ஓடிய ஊழியர் ஒருவரைக் காணவில்லை. ரஞ்சித் திருமணமாகி ஒரு மாதமே ஆகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சுவர் ஏறிக் குதித்து வந்தவர்களில் நால்வர் முதலில் அலுவலகப் பாதுகாப்பு ஊழியர் இருக்கும் இடத்திற்குச் சென்று துப்பாக்கி முனையில் அவரைக் கீழே படுக்க வைத்தனர். நிமிர்ந்தால் சுடுவோம் என்று மிரட்டி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த 7 பேரே தாக்குதலாளிகள்!

### பொலீஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 3

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த, நன்கு தமிழ் பேசிய ஏழு பேரே உதயன் பணிமனை மீதான மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்டனர் என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் தலா இருவரும் ஒரு மோட்டார் சைக்கிளில் மூவருமாக வந்தவர்களே தாக்குதலை நடத்தினர். அவர்களில் இருவர் தமது மோட்டார் சைக்கிள்களின் முகப்பு ஒளியை ஒளிரவிட்டபடி தயாராக நின்றிருக்க ஏனைய ஐந்து பேரும் மதிலின் மேலாக உள்ளே பாய்ந்து சென்று தாக்குதலை நடத்தியுள்ளனர் எனச் சாட்சிகள் தெரிவித்தனர் என்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் தாக்குதலுக்கு பயன்படுத்திய இயந்திரத் துப்பாக்கி சிக்கியதாம்!

### இராணுவத் தரப்பு கூறுகின்றது

கொழும்பு, மே 3.

நேற்று முன்னிரவு 'உதயன்' அலுவலகத்தில் தாக்குதல் நடத்தியவர்களினால் பயன்படுத்தப்பட்டது என்ற சந்தேகத்தில் 'ஏ.கே.-47' ரக துப்பாக்கி ஒன்றை, சம்பவம் நடந்து சில நிமிடங்களில் 'உதயன்' அலுவலகத்துக்குப் பின்புறம் யாழ். சிவன் கோயிலடிப் பகுதியில் இராணுவத்தினர் கைப்பற்றியிருக்கின்றனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்றிரவு தெரி வித்தார்.

'உதயன்' தாக்குதல் சம்பவம் நடந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் படைகளால் யுத்தம் மூலம் புலிகளை தோற்கடிக்க முடியாது என்கிறார் ஜெனரல் கல்கத்

## இந்தியத் தலையீட்டால் பிரச்சினை மேலும் சிக்கலாகும் என்று கருத்து

புதுடில்லி, மே 03.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில், இலங்கைப் படையினர் புலிகளைத் தோற்கடித்து வெற்றியடைய முடியாது. அதேபோல், 'விடுதலைப் புலிகளும் இலங்கைப் படையினரை வெற்றிகொண்டு விட முடியாது. இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஆயுதங்கள் மூலம் தீர்வைக் கண்டுவிட முடியாது. எனவே, சமாதான முன்னெடுப்புகளுக்கு அமைதித் தீர்வைத் தவிர மாற்றீடான வழி வேறு எதுவும் இல்லை என்று இந்திய லெப்டினன்ட் ஜெனரல் ஏ.எஸ். கல்கத் 'கலவ் நியூஸ்' என்ற சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

80ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், இந்திய அமைதி காக்கும் படைக்குத் தலைமைதாங்கி, வடக்கில் இந்தியப் படையை வழிநடத்திய பிரபலஸ்தர் லெப்டினன்ட் ஜெனரல் ஏ.எஸ். கல்கத்.

நோர்வேயின் அனுசரணையோடு இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளில் இந்தியாவையும் ஒரு பங்காளியாக்குவது, ஏலவே சிக்கலாகிப் போயிருக்கும் பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள் தள்ளி விடும் என்றும் ஜெனரல் கல்கத் எச்சரிக்கிறார்.

இலங்கை விவகாரங்கள் தொடர்பாக ஜெனரல் கல்கத் முன் வைக்கும் மதிப்பீடுகளுக்கும், தெரிவிக்கும் அபிப்பிராயங்களுக்கும் புதுடில்லி அதிகார பீடத்தில் முடிவு எடுக்கும் தரத்திலுள்ள உயர் அதிகாரிகள் மட்டத்தில் பெரு வரவேற்பு என்றும் உண்டு.

"இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் நோர்வே தனது மத்தியஸ்த பங்களிப்பை மிகவும் ஸ்திரமான முறையில் வழங்கி வருகிறது. இதன் பயனாக சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் சில முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர். ஏலவே சிக்கலாகியுள்ள இந்தச் சமாதான முன்னெடுப்பில் இந்தியாவும் ஒரு பங்காளி ஆனால், அது ஏலவே சிக்கலாகியுள்ள பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி கடினப்படுத்தி விடும்." - என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் ஜெனரல் கல்கத் கூறினார்.

இந்திய அமைதிப் படையினருக்கு இலங்கையில் ஏற்பட்ட அனுபவங்கள், இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டுக்கு ஒரு முகத்திரையைப் போட்டுள்ளன என்று நினைக்கிறீர்களா? என்று ஜெனரல் கல்கத்திடம் கேட்ட பொழுது அவர், "இலங்கையின் வட பகுதியில் இந்திய அமைதிப் படையினரின் பணி முடிவடைந்த காலப் பகுதி தொடக்கம் உலக அரங்கு மிகப் பாரிய மாற்றங்களைக் கண்டுள்ளது. உலக அரங்கில் இந்தியா, ஒரு முக்கிய பெரிய பங்காளியாக, குறிப்பாக பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் ஏற்றம் கண்டு முன்னணியில் திகழ்கிறது. உலக அரங்கில் இந்தியாவின் புதிய முக்கியத்துவத்தை அமெரிக்கா உட்பட ஏனைய பெரிய வல்லரசுகளும் அங்கீகரித்துள்ளன. உலகின் அரசியல் ஸ்திரப்பாட்டுக்கு இந்தியாவின் பங்களிப்பையும் அவை எதிர்பார்த்து நிற்கின்றன. எனவே, சர்வதேச விவகாரங்களின் ஏனைய கதாபாத்திரங்களின் எதிர்பார்ப்பை வழங்க வேண்டிய கூடுதல் பொறுப்பு இந்தியா மீது விழுந்துள்ளது." - என்று பதிலளித்தார்.

**சமாதானத்தின் எதிர்காலம்?**

சமாதானத்துக்கான வாய்ப்புகள் இலங்கையில் எப்படி? என்று கேட்ட பொழுது அவர் தெரிவித்ததாவது:-

"சமாதான முன்னெடுப்பின் அடிப்படை அளவுமானி எப்படியானது என்பதை இரு தரப்பினரும் ஏலவே அடையாளப்படுத்தியுள்ளனர். சமாதான முன்னெடுப்பின் கட்டமைப்பு 1987ஆம் ஆண்டு கைச் சாத்திடப்பட்ட இந்திய- இலங்கை உடன்படிக்கையில் நன்கு எடுத்துரைக்கப்பட்டு இருக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் சட்டபூர்வமான உரிமைகள் உறுதிப்படுத் தப் பட வேண்டியதன் அவசியம் உடன்படிக்கையில் ஒரு புறம் சொல்லப்பட்டிருக்கிறது. அதேசமயம், மறு புறத்தில், இலங்கையின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடுகளை நிலை நிறுத்துவது ..ற்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சட்டபூர்வமான உரிமைகளின் அம்சங்களையும், தாற்பரியங்களை யும் வகைப்படுத்தி இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றையும் அடையாளப் படுத்துவதே இனிச் செய்ய எஞ்சியிருக்கும் பணிகளாகும். - என்றார் அவர்.

**சிங்களத் தலைமை**

சமாதானத்தை அடைவதற்கு, சிங்களத் தலைவர்கள் போதுமான அளவு நெகிழ்வுத் தன்மையைக் காட்டுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்று கேட்ட பொழுது ஜெனரல் கல்கத் கூறியதாவது:-

"நெகிழ்வுத் தன்மையைக் காட்டுவார்கள் என்றே நான் நினைக்கிறேன். தேர்தல் காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடும் போக்கையே கடைப்பிடித்தார். ஆனாலும், சமாதான முயற்சியை முன்னெடுத்துத் தள்ளவும் அவர் தயாராக இருந்தார். சமாதான முன்னெடுப்பில் சகல அரசியல் கட்சிகளும் முற்று முழுதான பற்றுறுதியுடனேயே இருக்கின்றன." - என்றார் அவர்.

# முள்ளிக்குளத்தில் குடும்பப்பெண் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 03

மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் அடம்பன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிவஞானசுந்தரம் (வயது - 50) என்ற குடும்பப்பெண்ணே உயிரிழந்தவராவார். உடயப்பன் வீரப்பன் (வயது - 60), விரய்யா ஜெயலட்சுமி (வயது - 50) ஆகியோர் காயமடைந்தனர்.

வயலுக்கு வேலை செய்வதற்காகச் சென்று கொண்டிருந்தவேளை காட்டில் பதுங்கியிருந்த இனந்தெரியாதோர் திடீரெனத் துப்பாக்கியால் சுட்டனர் என காயமடைந்தவர்கள் மன்னார் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடல் விமானப் பயண ஒழுங்கு:

# தீர்க்கமான பதில் ஏதும் புலிகளிடமிருந்து இல்லை

கொழும்பு, மே 03

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் வன்னி சென்று திரும்புவதற்காக கடல் விமானத்தை வழங்குவது தொடர்பான அரசாங்கத்தின் யோசனைக்குப் புலிகள் தீர்க்கமான பதில் எதனையும் இதுவரை தரவில்லையென்று அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாலித கொஹோன்ன நேற்று மாலை 'சுடர் ஒளி'க்குத் தெரிவித்தார்.

கடல் விமானத்தை அரச மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எங்கே இறக்குவது என்ற விடயத்தில் மட்டுமே இணக்கப்பாடு காணப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட கலாநிதி பாலித கொஹோன்ன, அதற்கு அப்பால் இது விடயத்தில் எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லையென்றும் முன்னேற்றம் இல்லையென்றும் கூறினார்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் நேற்றைய தினமும் இதுபற்றிய பேச்சுகள் நடந்ததாகக் குறிப்பிட்ட அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர், இந்தப் பேச்சுகளின் விவரங்களை உடனடியாக வெளியிடமுடியாதென்றும் குறிப்பிட்டார்.

# தீர்வு முயற்சிகளுக்கு ஐ.தே.க. ஆதரவு ஆனால் யுத்த வழித் தீர்வை எதிர்க்கும்

## அக்கட்சி திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, மே 03.

அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் நோக்கில் அரசு மேற்கொள்ளும் அத்தனை நடவடிக்கைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும். ஆனால், யுத்த முனையில் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முயலுமானால் அதனை எக்காரணம் கொண்டும் ஐ.தே.க. ஆதரிக்க மாட்டாது.

- இவ்வாறு நேற்று அறிவித்திருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றின்போது கட்சியின் இந்த நிலைப்பாட்டை அறிவித்தார், அக்கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

"கடந்த சர்வகட்சி மாநாட்டின் போது விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக அனைத்து கட்சிகளின் நிலைப்பாடும் தெரிவிக்கப்பட்டது. இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியும் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எமது கட்சி ஆதரவளிக்கும். ஆனால், யுத்தம் என்ற தீர்வை முன்வைத்துக் கொண்டு, அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்குமானால் அதற்கு ஐ.தே.கட்சி ஆதரவு தரமாட்டாது.

யுத்தத்தின் மூலம் எந்நாளும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. அதனை அறிந்தே ஐக்கிய தேசியக் கட்சி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.

ஆனால், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி யுத்தம் எனும் கொடூர நோயால் மக்களை வாட்டி வதைக்க அரசு தீர்மானம் எடுக்குமானால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்கவோ, ஆதரவளிக்கவோ மாட்டாது. இதனைப் புரிந்து கொண்டு அரசு மக்களைப் பாதுகாக் க வும், சுதந்திரமாக வாழக்கூடிய வகை யிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுக்குமானால் அதற்கு நாம் எமது ஆதரவைத் தெரிவிப்போம்.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள்தான் தீர்வு என அனைத்துக் கட்சிகளும், அனைத்துத் தரப்பினரும் தெரிவித்து வருகின்றார்கள். நாங்களும் அதனையேதான் தெரிவிக்கிறோம்.

தற்போது நிழல் யுத்தம் எனும் நிஜ யுத்தம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. இராணுவத்தினர், பொது மக்கள் எனப் பெரும்பாலானோர் உயிரிழந்துள்ளனர்; உயிரிழக்கின்றனர். இதற்கெல்லாம் அரசே பொறுப் பேற்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னி வந்து செல்வதற்கு விமான வசதிகளை வழங்க அரசு மறுத்ததை அடுத்தே இந்தப் படுகொலைகள் இடம்பெற்றன.

ஆனால், தற்போது கடல் விமான வசதிகள் வழங்க அரசு ஒத்துக் கொண்டுள்ளது. இதனை, அப்போதே வழங்கியிருந்தால் - தெரிவித்திருந்தால் - இந்தப் படுகொலைகளைத் தடுத்திருக்கலாம்.

ஆகவே, அரசு இனியும் காலம் தாமதிக்கமல் அமைதிப் பேச்சுக்கு உயிர் கொடுக்கும் வகையில் நடவடிக் கைகளை முன்னெடுக்க வேண்டும். அதற்கு எமது கட்சி எப்பொழுதும் ஆதவளிக்கத் தயாராகவே உள்ளது." - என்றார்

# சிவிலியன்கள் படுகொலைகள் உடன் அரசு கவனத்துக்கு வரும்

## கண்காணிப்புக் குழு அறிவிப்பு

கொழும்பு, மே 03.

சிவிலியன்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் படையினர் அல்லது பொலிஸார் ஈடுபட்டால் அது பற்றி இலங்கை போர் நிறுத்தக் கணகாணிப்புக் குழு, உடனடியாகவே, அரசாங்கத்தின் கவனத்துக்கு, உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வசதியாக சமர்ப்பிக்கும் என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 29ஆம் திகதி கண்காணிப் புக் குழுவின் தலைமயகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக இலங்கை அரசு சில விளங்கங்களை எழுப்பியதன் மூலம் கண்காணிப்புக் குழுத் தலைமையகம் இந்த விளக்க அறிக்கையை நேற்று வெளியிட்டிருந்தது. அதன் விபரம் வருமாறு:-

"இலங்கை அரசாங்கத்துடன் கலந்து பேசிய பின்னரே, கீழ்க் கண்ட அறிக்கையை கண்காணிப்புக் குழு வெளியிட முடிவு செய்தது.

2006 ஏப்ரல் 29ஆம் திகதி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மூலம் விடுக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் சிவிலியன்கள் சம்பந்தப்பட்ட விளக்க முடியாத வன்முறைக் கொலைச் சம்பவங்கள் குறித்து நாங்கள் கவலை தெரிவித்திருந்தோம். அதுபற்றி இந்த அறிக்கை மூலம் தெளிவுபடுத்துகிறோம்.

கடந்த சில வாரங்களாகவும், மாதங்களாகவும் ஸ்தலத்திலுள்ள கண்காணிப்புக் குழு அங்கத்தவர்கள் தங்கள் பகுதியில் சில தனிப்பட்டவர்களின் நடவடிக்கைகள் குறித்து அதிக கவலை வெளியிட்டு வந்திருக் கின்றனர். இதில் சிலர் சிவிலியன்களுக்கு விரோதமான கபடச் செயற்பாடுகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டவர்களாக இருக்கக் கூடும்.

இலங்கையின் ஆயுதப் படையினர் மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகள் மீது ஒட்டு மொத்தமாக குற்றம் குறை கண்டு பிடிப்பதோ அல்லது அவர்களின் செயல்கள் மீது தீர்ப்பு வழங்குவதோ இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நோக்கமாகாது. தமது படையணியினர் மட்டத்தில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது போன்ற நடவடிக்கைளில் யாரும் ஈடுபட்டதாகத் தமக்கு எதுவும் தெரியாது என்று இலங்கை அரசு எமது கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

இது விடயத்தில் இலங்கை அரசு இந்த விவகாரத்தில் மிக விசுவாசமுடன் நடந்து கொள்வதாகவே நாங்கள் நம்புகிறோம். இதுபோன்ற மறைமுகமான அல்லது இரகசியமான நடவடிக்கைகள் சிவிலியன்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுவதை தடுப்பதில் பற்றுறுதியோடு இருக்கும் எனவும் நம்புகிறோம்.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கினால், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அவற்றை உடனடியாகவே இலங்கை அரசின் கவனத்துக்கு எதிர் நடவடிக்கைகளுக்காகக் கொண்டு வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்."

# கௌரவமான சமாதானத்தை எட்டுவதற்கு அமைதிப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

## அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் கருத்து

கொழும்பு, மே 03

"நாட்டில் கௌரவமான சமாதானத்தை அடைவதற்கு சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்"

- என சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித்த ஹோகென்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகவியலாளர் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் காலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உள்ளூர், வெளியூர் ஊடகவியலாளர் மத்தியில் உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடன் உடனடியாக நேரடிப் பேச்சுகளை [illegible] வெளிநாட்டு ஊட[illegible] தொடர்பாக உண்மையைத் திரிபுபடுத்தி ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுகின்றன. அத்தகைய நிலையை எமது ஊடகவியலாளர்கள் ஏற்படுத்திவிடக்கூடாது - என்றார்.

அங்கு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

நாட்டின் சாதாரண பொதுமக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக ஊடகங்களின் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

இலங்கையின் சமாதான வழிமுறையில் ஊடகங்களின் பங்குகுறித்து, ஊடகவியலாளர்களுக்கு அறிவுறுத்த ஊடக அமைச்சு தயாராகவுள்ளது. நாட்டின் சகல பிரிவினருக்கும் இடையிலுள்ள பல்வேறுபட்ட வேடுபாடுகளையும் நீக்குவதற்கு ஊடகத்துறையினரால் மட்டுமே [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலை நகல் 222 2030, 222 2083, 222 3837

# தமிழர் தரப்பின் குரலையும் பாரதம் செவிமடுக்க வேண்டும்

*"இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை, தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் ஆகியன குறித்து பாரதம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பிரதமர் மன்மோகன் சிங் பேச்சு நடத்த வேண்டும்."*

- இவ்வாறு பகிரங்கக் கோரிக்கை விடுத்திருக்கின்றார் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்.

இலங்கையின் இனச்சிக்கலில் பிரதான தரப்புகள் இரண்டு. ஒன்று - சிங்களத் தரப்பு. மற்றது - தமிழர் தரப்பு.

சிங்களத் தரப்பை தென்னிலங்கை அரசு பிரதிநிதித்துவப்படுத்துவதால், அந்த அரசுடன் தொடர்பாடலை மேற்கொள்வதன் மூலம் அத்தரப்புடனான பக்கத்தை பாரதம் அறிந்து கொள்ள முடியும்.

ஆனால், மற்றத் தரப்பான தமிழர்களைப் பொறுத்தவரை இன்றைய நிலையில் அவர்களின் ஏக, அதிகாரபூர்வ பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே. ஆயினும், அந்த அமைப்பு, இந்தியாவில் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டு, தடை செய்யப்பட்டிருப்பதால் அந்த அமைப்புடன் உத்தியோகபூர்வ ரீதியில் பேச்சு நடத்துவது இந்திய அதிகார வர்க்கத்துக்கு சிக்கலாக இருக்கும். ஆனால், அதற்காக ஈழத் தமிழர் தரப்பின் கருத்தை செவிமடுக்காமலேயே இலங்கைப் பிரச்சினையைத் தன்பாட்டில் கையாள்வதாக இந்திய அதிகார வர்க்கம் முடிவு எடுக்க முடியாது. தமிழர் தரப்பில் ஜனநாயகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இருக்கின்றனர். தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் 90 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றவர்கள் அவர்கள். எனவே, புலிகளோடு பேச முடியாத நிலை இருப்பதாக பாரத அரசு கருதுமானால், அது ஈழத் தமிழர்களின் ஜனநாயக வழிப் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசலாம். அதுவே நீதியானதும், நியாயமானதுமாகும்.

இலங்கை இனப் பிணக்குக்குள் எண்பதுகளில் அதீதமாகத் தலையிட்ட இந்தியா, எண்பதுகளின் நடுப்பகுதியில் தனது பிராந்திய வல்லாதிக்க நிலை என்ற மமதையோடு, தனது ஒருதலைப்பட்சமான தீர்மானங்களை - முடிவுகளை - இலங்கைக்குள் திணிக்க முயன்றது. ஈழத் தமிழர் தரப்பின் கருத்தையும், இசைவையும் பெற்றுக் கொள்ளாமல் தன்பாட்டில் தீர்வுக்கான முடிவு ஒன்றை எடுத்து, அந்த முடிவுக்கு தமிழர் தரப்பை இணங்க வைப்பதற்கான அழுத்தத்தை - கடும் பலவந்தத்தை - பிரயோகித்து, அதனைத் திணிக்க முயன்றது பாரதம்.

தமிழர் தரப்பின் கருத்துகளை, விருப்பங்களை, அபிலாஷைகளை உள்ளெடுக்காமல் - அல்லது உள்வாங்க விரும்பாமல் - எதேச்சாதிகாரமாகத் தீர்மானங்களை எடுத்து, அவற்றைத் திணிக்கும் விதத்தில் பாரதத்தின் அப்போதைய அரசியல் தலைமையும், அந்நாட்டின் அதிகார வர்க்கமும் நடந்து கொண்ட காரணத்தால்தான் பெரும் அவமானத்துடனும், தலைக்குனிவுடனும், ஆயிரக்கணக்கான படையினரின் உயிரிழப்புகளுடனும், ஆயிரக்கணக்கானோரின் அவய மற்றும் வாழ்க்கைப் பாதிப்போடும் இந்தியா, இலங்கை மண்ணிலிருந்து நடையைக் கட்ட வேண்டியதாயிற்று.

இவ்வாறு தமிழர் தரப்பின் கருத்தைச் சரியாக உள்ளெடுக்க விரும்பாமல் நடந்து கொண்டதன் மோசமான பலனை - விளைவுகளை - தமது நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்த இந்திய அதிகார வர்க்கம் இன்னும் கூட அந்தப் பட்டறிவிலிருந்து உரிய பாடத்தைச் சரியாகக் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

இலங்கை விவகாரத்தில் இந்தப் பிராந்திய வல்லாதிக்க நாடான இந்தியா இப்போது நீதி, நியாயத்தோடு நடந்து கொள்வது மட்டுமல்லாமல், நீதி, நியாயமாகத்தான் நடந்து கொள்வதாகக் காட்டிக் கொள்ளவும் வேண்டும். (Justice not only be done but also appear to be done).

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் ஒரு தரப்பான சிங்களவர்களுடனும், அனுசரணைத் தரப்பான நோர்வேயுடனும் கலந்தாலோசனைகள், பேச்சுகள், கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்ளும் இந்தியத் தலைவர்கள், தமிழர் தரப்பின் ஜனநாயக ரீதியிலான பிரதிநிதிகளைக் கூட - அவர்கள் சந்திப்புக்கு வாய்ப்புக் கேட்டும் அதைக் கொடுக்காமல் - சந்திக்க மறுத்து வருவது, இவ்விவகாரத்தில் இந்தியா, நீதி, நியாயமாக நடந்து கொள்வதை வெளிப்படுத்துவதாக அமையாது என்பதை இந்தியத் தரப்புக்கு தமிழர்கள் சார்பில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தமிழர்களுக்கு எதிராக அண்மைக் காலத்தில் சிங்கள அரசுத் தலைமை முறையற்ற விதத்தில் நடவடிக்கைகளை எடுத்து, அடக்கு முறையைப் பிரயோகித்தபோது இந்தியா, விரைந்து பொறுப்புணர்வோடு செயற்பட்டு, இலங்கைத் தமிழர்பால் தனக்குள்ள சிரத்தையையும், கரிசனையையும் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டதை நன்றியோடு நினைவுகூரும் ஈழத் தமிழர்கள், தங்கள் பிரச்சினை குறித்து செவிமடுப்பதிலும் இந்திய அரசியல் தலைமையும் அதிகார வர்க்கமும் அதேபோன்று நீதி, நியாயத்தோடு வெளிப்படையாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அதில் என்ன தப்பு இருக்க முடியும்?

# திருமலையில் புலிகள் பகுதி மீது நேற்றுக்காலை திடீர்த் தாக்குதல்

கொழும்பு, மே 03

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நாவலடிப் பகுதியில் அமைந்துள்ள முன்னணிக் காவலரண்கள் மீது நேற்றுக்காலை 10.30 மணியளவில் பெரிய எடுப்பில் திடீர்த் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளும் பதிலடி நடத்தியதையடுத்து அங்கு சுமார் அரைமணி நேரம் நேரடிச்சமர் வெடித்தது.

இலங்கை இராணுவத்தினரும், ஒட்டுப் படையினரும் இணைந்து இத்தாக்குதலை நடத்தினர் என விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தினர்.

முதலில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இறால்குழி பிரதேசத்தை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பின்னர் நாவலடி முன்னணிக் காவலரண்களை நோக்கி கடற்படையினரும், அவர்களைத் தொடர்ந்து இராணுவத்தினரும் ஷெல்களைப் பொழிந்தனர் என்று கூறப்பட்டது. புலிகளும் பதிலடித் தாக்குதல் நடத்தினர்.

சுமார் அரைமணிநேரம் நீடித்த இச் சமரில் தங்கள் தரப்பில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனக் குறிப்பிட்ட புலிகள், தமது தாக்குதலினால் அரசுத் தரப்புக்கும் அவர்களுடன் சேர்ந்தியங்கிய ஒட்டுப்படையினருக்கும் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றும் தெரிவித்தனர்.

படைத்தரப்புத் தாக்குதலில் பொதுமக்களில் ஒருவர் காயமடைந்தார்.

சம்பவத்தைத் தொடர்ந்து இறால் குழி மற்றும் நாவலடிப் பிரதேச மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

"அரச படைகளும், ஒட்டுப்படைகளும் இணைந்து இத்தாக்குதலை நடத்தினர். நாங்கள் திருப்பித் தாக்கி அதை முறியடித்தோம்" - என்று புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறையின் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

இராணுவத் தரப்பு இந்தத் தாக்குதல் சம்பவத்தை மறுத்துள்ளது. (உ)

# யாழ். எம்பியின் வீட்டினுள் புகுந்த இரு ஆயுததாரிகள்!

கொழும்பு, மே 03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின், யாழ்ப்பாணம், மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள இல்லத்துக்குள் நேற்றுக்காலை 7 மணியளவில் சுடுகலன்களுடன் அத்துமீறி நுழைந்த இருவர், வீட்டிலிருந்த வீட்டு உதவியாளரான வயோதிப மாதுவை அச்சுறுத்தி மிரட்டியிருக்கின்றனர். எம்.பியின் நடமாட்டங்கள், அவரது உதவியாளர்களின் விவரங்கள் போன்றவற்றை மிரட்டி அறிந்து கொண்ட அந்த நபர்கள், வீட்டுக்குள் தேடுதல் நடத்திவிட்டு, தங்களின் வருகை குறித்து யாருக்கும் அறிவிக்கக் கூடாது என எச்சரித்துவிட்டு அங்கிருந்து அகன்றிருக்கின்றனர். அவர்கள் இருவரும் சரளமாகத் தமிழில் உரையாடினர் எனக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் நடைபெற்ற சமயம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கொழும்பில் இருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து ஜனாதிபதி, சபாநாயகர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு கஜேந்திர குமார் பொன்னம்பலம் எழுத்துமூலம் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

இது போன்று சில மாதங்களுக்கு முன்னர் இராணுவச் சீருடையில் தம் வீட்டுக்குள் நுழைந்த படையினர், இதேபோன்று அச்சுறுத்தும் பாணியில் நடந்துகொண்டமையையும் -

அது குறித்து ஜனாதிபதியிடம் தாம் நேரில் முறையிட்டதை அடுத்து, யாழ். இராணுவத் தளபதி தம்முடன் தொடர்புகொண்டு அந்தச் சம்பவத்துக்காக மனவருத்தம் தெரிவித்ததையும் - கஜேந்திரகுமார் எம்.பி. நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நேற்றைய சம்பவம் தனக்கும், தனது ஊழியர்களுக்கும் விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல் எனத் தெரிவித்துள்ள அவர், தமது வீட்டுக்கு மிக நெருக்கமாக இராணுவ முகாம், இராணுவக் காவலரண் என்பன இருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். (உ)

# முகச்சவரம் செய்துகொண்டிருந்தவர் திருநெல்வேலியில் சுட்டுக்கொலை!

## கொடிகாமத்திலும் ஓட்டோ சாரதி பலி!

யாழ்ப்பாணம், மே0 3

சிகையலங்கரிப்பு நிலையத்தில் முகச்சவரம் செய்துகொண்டிருந்த ஒருவர், அங்கு வந்த இனந்தெரியாத நபரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார். பின்னர் வைத்தியசாலையில் உயிரிழந்தார். சிகையலங்கரிப்பு நிலையத்தின் உரிமையாளர் காயமடைந்தார்.

யாழ். நகரிலிருந்து இரண்டரைக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள திருநெல்வேலியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிடாரி அம்மன் கோயில், ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரான ஏ.தெய்வேந்திரம் (வயது 56) என்பவரே உயிரிழந்தார். சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளரான வி.சுகந்தன் (வயது 30) காயமடைந்தார். இவர் எம்.எஸ். ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்தவர். படுகாயமடைந்த இவர் யாழ். வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தெய்வேந்திரத்துக்கு சுகந்தன் முகச்சவரம் செய்துகொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் இருவர் அங்கு வந்தனர் என்றும் -

அவர்களில் ஒருவர் தெய்வேந்திரம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் -

பின்னர் இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் - விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கோப்பாய்ப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள படையினரின் பிரதான விநியோக வழியான பலாலி வீதியின் அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த வீதியில் நாளுக்குப் பல தடவைகள் இராணுவத்தினர் வீதிச் சோதனைகளை மேற்கொள்வதுடன், இரவு பகலாகவும் காவலிருக்கின்றனர்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் தொடர்ந்து வரும் கொலைகளின் வரிசையில் கொடிகாமத்தில் நேற்று மற்றுமொரு ஓட்டோ சாரதி சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

செல்வரத்தினம் சீலன் (வயது 35) என்ற இளைஞரே இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார்.

கொடிகாமம் சந்தியில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இவர் உயிரிழந்தார். (ற)

# கருணா குழு மீதான தாக்குதலில் ஈ.என்.டி.எல்.எவ். ரீகனும் பலி!

## அவரது பூதவுடல் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது

கொழும்பு, மே 03.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப் பகுதியில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய ஒட்டுப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பின் முக்கிய உறுப்பினரான ரீகன் உட்பட நான்கு பேரும், கருணா குழுவின் முக்கிய உறுப்பினர்களான மணாளன் மற்றும் கிருஷ்ணா ஆகியோரும் அடங்குகின்றனர்.

இந்தத் தாக்குதலின் விவரங்களை இணையத்தளமொன்று வெளியிட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பொலன்னறுவை எல்லையிலுள்ள கண்டன்காடு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள காசன்குளம் பகுதியில் இருந்த கருணா குழுவினரின் இரு முகாம்களும், ஈ.என்.டி.எல்.எவ். முகாமொன்றுமே தாக்குதலில் சிக்கின.

கேணல் பால்ராஜ் தலைமையிலான விடுதலைப் புலிகளின் 200 பேர் கொண்ட மொமாண்டோ அணியே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் பானு தாக்குதலுக் கான திட்டங்களை வகுத்தார். இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்கு புலிகளின் விசேட படையணிச் சேர்ந்த மேஜர் நாகேஷ், புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் கீர்த்தி ஆகியோரும் பெரும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

கருணா மற்றும் ஈ.என்.டி.எல்.எவ். உறுப்பினர்கள் தங்கியிருந்த முகாமுக்கு அருகில் சிங்கபுர இராணுவ முகாம் உள்ளது. அதேபோல், குருவத்த மற்றும் சூரியவெவ பகுதிகளிலும் இரு இராணுவ முகாம்கள் உள்ளன.

தாக்குதலுக்குள்ளான முகாம்களில் குறைந்த பட்சம் 90 பேர் வரையானோர் இருப்பது வழக்கம். ஆனால், வார இறுதி நாளான சம்பவ தினம் இவர்களில் பலர் வேறு சில இடங்களுக்குச் சென்று விட்டதால் தாக்குதல் நடைபெற்றபோது 50 முதல் 60 பேர் வரையானோரே அங்கு இருந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர் கருணா குழுவின் ஐந்து முக்கிய உறுப்பினர்கள் புலிகளிடம் உயிரோடு பிடிபட்டனர் எனக் கூறப்படுகிறது.

பெரியகல்லாறு ரீகன் எனபவர் கொல்லப்பட்டவர்களில் முக்கியமானவராவார். ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பில் கடந்த இருபது வருட காலமாக முக்கிய பொறுப்புகளை வகித்த ரீகன் பின்னர் இந்தியாவின் 'றோ' புலனாய்வுத் துறையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார்.

தற்போது இந்தியாவில் அவரது குடும்பம் இருப்பதால் இவரது பூதவுடலை அங்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. - என்று தெரிவிக்கப்பட்டது. (உ-05)

## பொலிஸ் தரப்பிலிருந்து குழப்பகரமான அறிக்கை

# மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் திருமலை நகரில் பயணிக்கத் தடை!

## ஆனால் நகரில் அவற்றின் தரிப்பிடம் பற்றி அறிவிப்பு

திருமலை, மே 03

திருகோணமலையில் கிளைமோர் தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்று வருவதையடுத்து திருகோணமலை நகரப்பகுதியில் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் மூலம் பயணம் செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்திருக்கின்றனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மறு அறிவித்தல் வரும்வரை மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலோ அல்லது சொந்த இடங்களிலோ பாவனையாளர்கள் நிறுத்தி வைக்க வேண்டுமெனவும் திருகோணமலையிலுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் கல்யாண மண்டப வளவினுள் காளிகோவிலுக்கு முன்பாகவும், ஏகாம்பரம் வீதி (என்.சி. றோட்) றோயல் கல்லூரிக்கு முன்பாகவும், சங்கமித்த வீதி விளையாட்டு மைதானத்திலும், மடத்தடி ரயில் நிலைய வீதி ஆகியவற்றிலும் மோட்டார் சைக்கிள்களை அல்லது சைக்கிள்களை நிறுத்திவைக்கலாமென்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை நகரப் பகுதிக்கு மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் மூலமாக பயணம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று தமது அறிவிப்பில் தெரிவித்திருக்கும் பொலிஸார், அதேநேரம் நகரப் பகுதிக்குள் அந்த வாகனங்களைத் தரிப்பதற்கான இடம் குறித்தும் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கின்றமை நகர மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. (உ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச படைகள், துணைக்குழுக்களின் அச்சுறுத்தலின் தொடர்ச்சியே உதயன் அலுவலகம் மீதான தாக்குதல்

## விடுதலைப் புலிகளின் அரசியல்துறை கண்டனம்

சுயாதீனமாகச் செயற்படும் தமிழ் ஊடகங்களுக்கு ஸ்ரீலங்கா அரச படைகளும் அதன் துணைக் குழுக்களும் விடுத்து வரும் அச்சுறுத்தலின் தொடர்ச்சியாக இன்று யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டிருக்கின்றது. அதன் இரண்டு பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே, யாழ். குடாநாட்டில் நடுநிலைமையோடு செயற்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் ஈ.பி.டி.பியினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். நடு நிலைமையுடன் ஊடகங்கள் உண்மைகளைத் தோலுரித்துக் காட்டும் சந்தர்ப்பங்களில் எதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

இதன் பிரதிபலிப்புகளாக மட்டக்களப்பில் நாட்டுப்பற்றாளர் ஜி. நடேசன், கொழும்பில் மாமனிதர் 'தராகி' டி. சிவராம், திருகோணமலையில் சு. சுகிர்தராஜன் ஆகிய பத்திரிகையாளர்கள் ஸ்ரீலங்கா அரசின் ஆசீர்வாதத்துடன் கொல்லப்பட்டனர். இறுதியாக இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியர்களைத் தேடிச் சென்ற ஈ.பி.டி.பியினரும், ஸ்ரீலங்காப் படையினரும், அவர்கள் எதிர்ப்படாமையால் இரண்டு பணியாளர்களை சுட்டுக் கொன்றுள்ளனர். மேலும் இச்சம்பவத்தில் மூன்று பணியாளர்கள் படுகாயமடைந்திருக்கின்றனர்.

'உதயன்' பத்திரிகையை இயங்க விடாமல் செய்வதற்கு கடந்த காலங்களிலும் ஸ்ரீலங்கா அரச படைகள் பலத்த பிரயத்தனங்களைச் செய்திருந்தன. விமானத் தாக்குதலுக்கும் கூட அதன் பணிமனை இலக்கானது. ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இருந்து கொண்டு அதன் அட்டூழியங்களை வெளிக் கொணர்ந்ததற்காக படையினர் அதை 'சீல்' வைத்து மூடியிருந்தனர்.

இப்போது 'உதயன்' பத்திரிகையை இயங்க விடாமல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் உட்புகுந்து படுகொலையைச் செய்ததுடன் அதன் அலுவலக உபகரணங்களையும் அடித்துச் சேதப்படுத்தி இருக்கின்றனர்.

சர்வதேச ரீதியாக ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்காகச் செயற்படும் அமைப்புகளும், சர்வதேச ஊடகங்களும் இதனைக் கண்டிப்பதுடன் இத்தகைய அநியாயங்கள் தொடராமல் தடுக்க ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும்.


தமிழ் ஊடகங்களுக்கு விடப்படும் இத்தகைய அச்சுறுத்தல்கள், ஒரு போதும் ஜனநாயகத்தையோ, சமாதானத்தையோ தோற்றுவிக்க உதவாது.

ஸ்ரீலங்கா அரசினதும் அதன் ஒட்டுப்படைகளினதும் 'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.


கொடூரமாகக் கொல்லப்பட்ட 'உதயன்' பத்திரிகையின் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொளகின்றோம்.

- என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





சேதமடைந்த கணனி அறை இயங்க முடியாத நிலையில்..



சுக்குநூறான கணனிகளில் ஒன்று.

## அரசும் கண்டனம் தெரிவிப்பு

கொழும்பு, மே 3

யாழ்ப்பாணம் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது நேற்றைய தினம் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

இது தொடர்பில் நேற்று அரசு அறிக்கையொன்றை விடுத்திருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது நடத்தப்பட்ட இந்த வன்மமான தாக்குதலை அரசாங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. கருத்துச் சுதந்திரமென்ற இலங்கையின் நீண்ட நாள் உரிமை மீதான இந்தத் தாக்குதல் இலங்கையில் உலக ஊடகச் சுதந்திர தின நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கும்போது இடம்பெற்றிருப்பது துரதிஷ்டவசமானது. ஊடக சுதந்திர தின நிகழ்வுகளைச் சீர்குலைக்கும் வகையிலும், அரசின் அமைதி முயற்சிகளுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் அரசுக்கு அபகீர்த்தி உருவாக்கும் இந்த சம்பவத்தின் சூத்திரதாரிகளை இனங்காண்பதற்கு பாரபட்சமற்ற விசாரணைகளை உடனடியாக நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-05)

### உதயன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு அவர் அருகில் ஓர் ஆயுததாரி நின்றுகொண்டார். ஏனையவர்களில் இருவர் அலுவலகத்தின் முன்புறம் இருந்த சந்தைப்படுத்தல் முகாமையாளரின் அலுவலகம் நோக்கிச் சென்றனர். எந்தக் கேட்டுக் கேள்வியும் இன்றி அவர் மீது சரமாரியாத் துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர். அவர் இருந்த இடத்திலேயே மடிந்து வீழ்ந்தார்.

பின்னர் அங்கிருந்து திரும்பிய அவர்கள், பாதுகாப்பு அலுவலரின் அருகோடு இருந்த விநியோகப் பதிக்குள் நுழைந்தனர். அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த அனைவரையும் முதலில் கீழே இருக்குமாறு கூறி தாறுமாறாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். பின்னர் அனைவரையும் கீழேபடுக்குமாறு கூறினர். எவரும் நிமிர்ந்து பார்க்கக்கூடாது என்று கூறிவிட்டு மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதில் பாதுகாப்பு ஊழியருக்கு அருகே நிலத்தில் வீழ்ந்து படுத்திருந்த விநியோகப் பகுதி ஊழியரான உதயகுமார் காயமடைந்தார். காயப்பட்டதும் அவர் "ஐயோ" என எழுப்பிய குரலைக் கேட்டு துள்ளி நிமிர்ந்து பார்த்த ரஞ்சித்தை நோக்கி ஆயுததாரி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். காயமடைந்து கீழே வீழ்ந்த அவரின் முதுகில் காலை வைத்து மீண்டும் அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் அவரும் அந்த இடத்திலேயே மடிந்தார்.

விநியோகப் பிரிவில் இருந்த உதவி விநியோக அலுவலரின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டி "எங்கேயடா 'கெட் ஒவ்பிஸ்' காட்டு" - எனக் கேட்டுள்ளனர். பின்னர் துப்பாக்கி முனையில் அவரை இழுத்துச் சென்று ஆசிரியர் பீடத்தைக் காட்டுமாறு மிரட்டியதுடன் குறித்த உதவியாசிரியர் ஒருவரின் பெயரைக் கூறி "அவன் எங்கே?" என்றும் கேட்டுள்ளனர்.

பாதுகாப்பு ஊழியரின் பகுதியில் இருந்து உள்ளே, ஆசிரியர் பீடத்திற்குச் செல்லும் வரையும் கண்ணில் கண்ட இடத்திலெல்லாம் சகட்டுமேனிக்குச் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதை அடுத்து சுதாகரித்துக்கொண்ட ஆசிரியர் பீட ஊழியர்களும் கணனிப் பிரிவு ஊழியர்களும் மறைவிடம் ஒன்றில் பதுங்கிக் கொண்டனர் என்பதால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிக்கொண்டனர். சகட்டுமேனிக்கு ஆசிரியர் பீடத்திற்குள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட ஆயுததாரிகள் மூவரும் பின்னர் விநியோக உதவி அதிகாரியையும் இழுத்துக்கொண்டு படிகளில் இறங்கத் திரும்பினர். எனினும் திடீரென விழிப்பு வந்தவர்களாக அவர்களில் ஒருவர் ஓடிச்சென்று கணனி அறைக்குள் புகுந்து கன்னாபின்னாவென்று சுட்டுத் தள்ளினார்.

இதில் அங்கிருந்தகணனிகள் அனைத்தும் சிக்கிச் சிதறி சின்னாபின்னமாகின. பத்திரிகையைப் பிரசுரிப்பதற்குத் முடியாத அளவிற்கு அனைத்துக் கணனிகளும் சல்லடைகளாத்துளைக்கப்பட்டன.

அதன் பின்னர் அங்கிருந்து வெளியேறிய ஆயுததாரிகள், சென்ற இடங்களிலெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். மீண்டும் பாதுகாப்பு ஊழியரின் பகுதிக்குச் சென்ற அவர்களில் ஒருவர், பத்திரிகையின் அச்சகப் பகுதிக்கு சென்று தாக்க வேண்டும் என்று அரைகுறைச் சிங்களத்தில் தெரிவித்துள்ளார். எனினும் மற்றையவர் அதனை மறுத்து "நேரமாகி விட்டதால் உடனடியாக நாங்கள் செல்லவேண்டும்" - என்று சிங்களத்தில் பதிலளித்துள்ளார்.

துப்பாக்கி முனையில் தம்முடன் இழுத்துச் சென்ற விநியோக உதவி அதிகாரியைக் கீழே படுக்குமாறு கூறிவிட்டு சடுதியாக வீதிக்குச் சென்று மோட்டார் சைக்கிள்களில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர் கொலையாளிகள்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. (ம)

### உதயன் தாக்குதலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்த கையோடு சிவன் கோவில் காவலரணில் நின்றிருந்த இரண்டு இராணுவத்தினர் அவ்வழியே இருட்டில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்தபோது அது நிற்காமல் போகவே அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் -

அந்தச் சூட்டை அடுத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அந்த ஆயுதத்தைப் போட்டு விட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் -

படையினர் நடத்திய சூடு அவர்களில் பட்டதாலேயே அவர்கள் ஆயுதங்களைப் போட்டு விட்டுத் தப்பினர் எனக் கருதவேண்டியுள்ளது என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார். அப்பகுதியில் பின்னர் சந்தேகத்துக்கு இடமான இருவரைப் படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் அவர் கூறினார். (உ)

### மூன்று......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். குடாநாடு முழுமைக்குமான குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவு அதிகாரியான உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் மார்க் தெரிவித்தார்.

"சர்வதேச ஊடக சுதந்திர தினத்திற்கு முதல் நாளில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. பத்திரிகையின் பணியை முடக்குவதும் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதுமே இதன் இலக்கு. தாக்குதலாளிகள் ஒரே கலலில் இரு மாங்காய்கள் அடித்திருக்கிறார்கள்." - என்றார் அவர்.

தாக்குதலாளிகளில் ஒருவர் பிஸ்டல் துப்பாக்கியும் மற்றொருவர் ஏ.கே.-47 துப்பாக்கியையும் ஒருவர் எஸ்.எம்.ஜி. எனப்படும் இலகு ரக துப்பாக்கியையும் வைத்திருந்தனர் என்றும் -

ஏனைய மூவரும் ரி-56 ரக துப்பாக்கிகளை வைத்திருந்தனர் என்றும் - அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளை விரைவில் கண்டுபிடித்துவிடுவோம் என்றும் அவர் தெரிவித்தார். சம்பவத்தில் பொலீஸாரோ படையினரோ சம்பந்தப்படவில்லை. வேறு ஒரு ஆயுதக் குழுவினரே இதற்குக் காரணமானவர்கள். அவர்கள் விரைவில் அடையாளம் காணப்படுவார்கள் என்றும் கூறினார் அவர்.

நன்றாகத் தமிழ் பேசி தாக்குதலாளிகள், பின்னர் அரைகுறைச் சிங்களத்தில் பேசியமை இந்தக் குற்றச் செயல் தொடர்பான குற்றச்சாட்டு பொலிஸார் மீதோ படையினர் மீதோ வீழ்ந்து விடட்டும் என்பதாக இருக்கலாம் என்றும் அவர் சந்தேகம் கிளப்பினார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பாக யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரனுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணைகளை நடத்தினார். சாட்சியங்களிடம் இருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்த அவர், உயிரிழந்தவர்களின் சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.


போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் இந்தச் சம்பவம் தொடர்பாக நேரில் வந்து பார்வையிட்டுத் தகவல்களைத் திரட்டினர். (ம)



ஆயுததாரிகளால் இழுத்து சேதமாக்கப்பட்ட இன்றைய பத்திரிகைப் பிரதிகள். இதனால் ஏனைய பக்கங்களைப் பிரசுரிக்க முடியாமல் போனது.



உயிரிழந்த ரஞ்சித்தின் சடலம்



உயிரிழந்த முகாமையாளர் தனது கதிரையில் சரிந்து கிடக்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org